# காலாண்டுப் பொதுத் தேர்வு- 2024

## எட்டாம் வகுப்பு

நேரம்: 2.30 மணி சமூக அறிவியல் மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:-** 14×1=14

1) 1453ம் ஆண்டு கான்ஸ்டான்டி நோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?
அ) பிரான்ஸ் ஆ) துருக்கி இ) நெதர்லாந்து ஈ) பிரிட்டன்

2) மகல்வாரி முறையில் மகல் என்றால் என்ன?
அ) வீடு ஆ) நிலம் இ) கிராமம் ஈ) அரண்மனை

3) திருச்சிராப்பள்ளி பிரகடனம் யாரால் வெளியிடப்பட்டது?
அ) மருதுபாண்டியர்கள் ஆ) வேலு நாச்சியார்
இ) கிருஷ்ணப்பநாய்க்கர் ஈ) தீரன் சின்னமலை

4) ராணி லட்சுமிபாய் எப்பகுதியில் ஏற்பட்ட புரட்சியை வழி நடத்தினார்
அ) மத்திய இந்தியா ஆ) டெல்லி இ) கான்பூர் ஈ) ப்ரெய்லி

5) புவியில் உள்ள நன்னீரின் சதவிகிதம் ______
அ) 71% ஆ) 97% இ) 2.8% ஈ) 0.6%

6) உலக மண் நாளாக கடைபிடிக்கப்படும் நாள்
அ) ஆகஸ்ட் 15 ஆ) ஜனவரி 12 இ) அக்டோபர் 15 ஈ) டிசம்பர் 5

7) ______ என்ற கருவி ஈரப்பதத்தை அளக்கப் பயன்படுகிறது
அ) காற்றுமானி ஆ) அழுத்தமானி இ) ஈரநிலைமானி ஈ) வெப்பமானி

8) போரின் காரணமாக நடைபெறும் குடிபெயர்வு ______ ஐ சார்ந்தது
அ) மக்களியல் ஆ) சமூக மற்றும் கலாச்சாரம்
இ) அரசியல் ஈ) பொருளாதாரம்

9) உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது ______
அ) 62 ஆ) 64 இ) 65 ஈ) 58

10) ஒரு மாநிலத்தின் ஆளுநர் யாரால் நியமிக்கப்படுகிறார்?
அ) குடியரசுதலைவர் ஆ) துணைக் குடியரசுதலைவர்
இ) பிரதம மந்திரி ஈ) முதலமைச்சர்

11) மாநில அமைச்சரவை குழுவின் தலைவர் ______
அ) ஆளுநர் ஆ) முதலமைச்சர் இ) சபாநாயகர் ஈ) உள்துறை அமைச்சர்

12) இந்திய அரசியலமைப்பின் முகவுரை திருத்தப்பட்ட ஆண்டு
அ) 1951 ஆ) 1976 இ) 1974 ஈ) 1967

13) இந்திய ரூபாய் குறியீட்டினை (₹) வடிவமைத்தவர் யார்?
அ) உதயகுமார் ஆ) அமர்த்தியா சென் இ) Dr. பானர்ஜி ஈ) இவற்றில் எவரும் இல்லை

14) வங்கி பணம் என்பது எது?
அ) காசோலை ஆ) வரைவு
இ) மேற்கூறிய அனைத்தும் ஈ) கடன் மற்றும் பற்று அட்டைகள்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:-** 5×1=5

15) முகலாய பேரரசர் ______ இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வர்த்தகம் செய்ய அனுமதி அளித்தார்.
16) சிவகங்கையின் சிங்கம் என ______ அழைக்கப்படுகிறார்.
17) நீர்சுழற்சியில் ______ நிலைகள் உள்ளன
18) இந்திய அரசியலமைப்பு சட்டம் ______ குடியுரிமையை மட்டும் வழங்குகிறது.
19) இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ______

**III. பொருத்துக:-** 5×1=5

| | | |
|---|---|---|
| 20) நீல்தர்பான் | - | இரண்டாம் பகதூர்ஷா |
| 21) ஆங்கிலேயர்கள் | - | வரி ஏமாற்றுபவர்கள் |
| 22) டெல்லி | - | மேகங்கள் |
| 23) கருப்பு பணம் | - | 1600 |
| 24) நீர் சுருங்குதல் | - | இண்டிகோ விவசாயிகளின் துயரம் |

**IV. சரியா? தவறா?** 4×1=4

25) குடிசை பகுதிகள் பொதுவாக பெருநகரங்களில் காணப்படுகின்றன
26) படிவுப் பாறைகளை சுற்றி எரிமலைகள் காணப்படுகின்றன.
27) 1799 அக்டோபர் 17ம் நாள் கட்டபொம்மன் தூக்கில் இடப்பட்டார்.
28) இந்திய நாட்டிற்கென ஒரு சமயம் உள்ளது.

**V. காரணம் கூறுக:- (ஏதேனும் 3க்கு மட்டும்)** 3×2=6

29) தீப்பாறை எரிமலை பகுதியில் காணப்படுகிறது
30) நீர் புகாத இடங்களில் நீரின் ஊடுருவல் குறைவாக உள்ளது
31) உயரம் அதிகரிக்கும் போது வெப்பம் குறைகிறது
32) புவியில் நன்னீரின் ஊடுருவல் குறைவாக உள்ளது
33) காலநிலையும், வானிலையும் வெவ்வேறு இடங்களில் மாறுபடுகின்றன

**VI. வேறுபடுத்துக:- (ஏதேனும் 3க்கு மட்டும்)** 3×2=6

34) காலநிலை மற்றும் வானிலை
35) உருமாறிய பாறைகள் மற்றும் படிவுப் பாறைகள்
36) கோள் காற்று மற்றும் பருவ காற்று
37) மண்வள பாதுகாப்பு மற்றும் மண் அரிப்பு
38) முழுமையான ஈரப்பதம் மற்றும் ஒப்பு ஈரப்பதம்

**VII. சுருக்கமான விடையளி. (ஏதேனும் 10க்கு மட்டும்):-** 10×2=20

39) இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக.
40) துணைப்படைத் திட்டத்தில் கையொப்பம் இட்ட நாடுகளின் பெயர்களை குறிப்பிடுக?
41) இரயத்துவாரி முறையின் சிறப்புகள் யாவை?
42) பாளையக்காரர்கள் என்பவர் யார்? சிலரின் பெயர்களை கூறுக?
43) வெயிற்காய்வு என்றால் என்ன?
44) தீப்பாறைகள் எவ்வாறு உருவாகின்றன?
45) நீர் சுழற்சி - வரையறு
46) மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளின் பெயர்களை எழுதுக.
47) உலகில் அதிக மக்கள் தொகைக் கொண்ட நான்கு பெருநகரங்களைப் பட்டியலிடுக.
48) குடியுரிமையின் வகைகளை குறிப்பிடுக?
49) கருப்பு பணம் என்பதின் பொருள் என்ன?
50) சமய சார்பற்ற நாட்டின் சிறப்புப் பண்புக் கூறுகள் யாவை?
51) பண்டமாற்று முறை என்றால் என்ன?

**VIII. கீழ்காணும் வினாக்களுக்கு விரிவான விடையளி. (ஏதேனும் ஆறு மட்டும்):-** 6×5=30

52) நிலையான நிலவரி திட்டத்தின் நிறை, குறைகள் விளக்குக?
53) நவீன வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.
54) 1857ம் ஆண்டு புரட்சிக்கான காரணங்களை எழுதுக.
55) மண்ணினை வகைப்படுத்தி விவரிக்கவும்?
56) நகரமயமாதலின் ஏற்படும் சவால்களை ஆராய்க.
57) மழைப்பொழிவின் பல வடிவங்களை பற்றி விவரி?
58) முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் விவரி?
59) சமய சார்பற்ற கல்வி நமக்கு ஏன் தேவை?
60) பண்ட மாற்று முறையின் தீமைகள் யாவை?

**IX. வரைபடங்களை குறிக்கவும்:-**

61) கீழ்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும் 5×1=5
i) கல்கத்தா ii) மீரட் iii) டெல்லி iv) சென்னை V) கள்ளிக்கோட்டை

62) கீழ்கண்ட இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும் 5×1=5
i) இந்தியா ii) டோக்கியோ iii) தென்அமெரிக்கா
iv) பசுபிக் பெருங்கடல் V) நிலநடுக்கோடு

********